# இலங்கை மருத்துவப் பேரவை

## வெற்றிடம்

## சட்ட உத்தியோகத்தர்

இலங்கை மருத்துவப் பேரவைக்கு (SLMC) சட்ட உதவிகளை வழங்குவதற்கு தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து SLMC இனால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆட்சேர்ப்பு முறை**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இடையே SLMC இனால் நியமிக்கப்பட்ட திறன் மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை குழுவால் நடத்தப்படும் தகைமை மதிப்பீடு ஒன்றின் முடிவின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறும் அபேட்சகர் வெற்றிடத்திற்கு பணியமர்த்தப்படுவார். தகுதி மதிப்பீட்டு நேர்முகப்பரீட்சை SLMC இனால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளி வழங்கும் முறைக்கு அமைய நடத்தப்படும்.

**தேவையான தகைமைகள்**

கல்வி/ தொழில்முறை தகைமைகள்

- இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி (AAL) ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

**அனுபவம்**

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின் மூன்று (03) ஆண்டுகளுக்கு குறையாத காலம் தொழில்முறை செயற்பாடு மற்றும் வழக்கறிஞர் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். (முந்தைய அனுபவம், திகதி மற்றும் சான்றளிப்பவரின் உத்தியோகபூர்வ முத்திரையை தெளிவாகக் குறிப்பிட்டு செயற்பாட்டு தொழில்முறை அனுபவத்தில் அத்தாட்சியாக நேர்முகப்பரீட்சையில் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்)

**அல்லது**

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின் அரச நிறுவனம் ஒன்றில் வழக்கு விசாரணை நடத்தியதுடன் தொடர்புபட்ட சட்டப் பதவி ✷ ஒன்றில் மூன்று (03) ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். (திணைக்களம்/ நிறுவனத்தின் செயலாளர்/தலைவரினால் வழங்கப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் இதன் உண்மைத் தன்மையை உறுதி செய்தல் வேண்டும் என்பதோடு இது இந்த அனுபவத்திற்காக சட்ட பதவி/ பதவிகளுக்கு தொடர்புடைய ஆட்சேர்ப்புக்கு அடிப்படை தகைமையாக உள்ளடக்கப்படும்)

✷ சட்டப் பதவி ஒன்று என்பது சட்டப் பட்டம் பெற்ற அல்லது சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் பெற்றவராகும். இது ஆட்சேர்ப்புக்கு அடிப்படை தகைமையாகும்.

வைத்திருக்கும் சட்டப் பட்டம் (LLB) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது ஏதேனும் பட்டப்பின்படிப்பு தகைமைகள் மேலதிக தகைமை ஒன்றாக கருதப்படும்.

**உடற்றகைமை**

அனைத்து அபேட்சகர்களும் பதவியை மேற்கொள்வதற்கான உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**பணிகள் மற்றும் பொறுப்புகள்**

- ஒழுக்காற்று விசாரணைகளின் வழக்குத் தொடுத்தல் (ஆதாரங்களை வழங்கல், குறுக்கு விசாரணை, மறு விசாரணை மற்றும் இறுதி சமர்ப்பிப்புகளை தாக்கல்செய்தல்)
- SLMC இன் சட்ட – தலைவரின் வழிகாட்டலின் கீழ் SLMC உடன் தொடர்புபட்ட அனைத்து சட்ட/ சட்டவாக்க விடயங்களுக்கு உதவுதல்.
- சட்டப் பிரிவு தலைவரின் வழிகாட்டலின் கீழ் SLMC இற்கு தொடர்புடைய சட்டம்/ சட்டவாக்க விடயங்களில் சுகாதார அமைச்சின் சட்டப் பிரிவு, சட்டமா அதிபர் திணைக்களம், சட்டவரைஞர் திணைக்களத்துடன் தொடர்ச்சியாக தொடர்பில் இருத்தல்.

**தொழில் விதிமுறைகள்**

- இந்தப் பதவி நிரந்தரமானது.
- இந்த நியமனம் மூன்று ஆண்டு தகுதிகாண் காலம் ஒன்றை கொண்டது.
- தேர்வு செய்யப்பட்ட அபேட்சகருக்கு பதவியின் பொறுப்புகள் மற்றும் பணிகள் (குறிப்பு விதிமுறைகள்) கிடைக்கச் செய்யப்படும்.
- தேர்வு செய்யப்படும் அபேட்சகர் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு உரித்தாவார்.
- பகுதி நேரம்/ ஒப்பந்த பதவி நிலைக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கும் இது உரித்தாகும். ஒப்பந்த நியமனம் செயற்றிறன் அடிப்படையில் இரண்டாவது தவணை ஒன்றுக்காக மறு நியமனத்திற்கு வாய்ப்பு உள்ள, மூன்று (03) ஆண்டுகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்காக இருக்கும்.

**சம்பள அளவு**

- நிரந்தர பதவிக்கான சம்பளம் - MM 1-2-2016 ரூபா 54,550 – 10 x 1,375 – 15 x 1,910 = ரூபா 96,950/=
- ஒப்பந்த சம்பளம் மற்றும் மற்ற ஊதியங்கள் இலங்கை மருத்துவச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட வகையில் அமையும்.

**வயது**

- விண்ணப்ப இறுதித் திகதிக்கு 21 வயதுக்கு உட்படாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவைகளில் உள்ளவர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)
- ஒப்பந்த நியமனங்களுக்கான வயதெல்லை: தொடர்புடைய அரச சுற்றுநிருபங்களின்படி.

**விண்ணப்ப நடைமுறை**

விண்ணப்பதாரர்கள் 2025 மார்ச் 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைப்பதற்கு பதவிக்கான தனது தகைமையை குறிப்பிட்டு முகப்புக் கடிதம் ஒன்றுடன் சேர்த்து (விண்ணப்பதாரர் அரச துறையில் பணியாற்றுவதாயின் தேர்வு செய்யப்பட்ட அதிகாரியை விடுவிப்பதன் உறுதிப்பாட்டுடன் நிறுவனத்தின் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும்) முழுமையான சுயவிபரக்கோவையை சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு" என்று குறிப்பிட்டிருத்தல் வேண்டும் என்பதோடு விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது SLMC/ பதிவாளருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பதாரரினால் விண்ணப்பத்தில் குறிப்பிட்டு அனுப்பப்படும் ஏதேனும் விபரம் தவறானது என்று கண்டறிந்தால் அல்லது முகப்புக் கடிதம் தவறானது என்று ஆட்சேர்ப்புக்கு முன்னர் கண்டறியப்பட்டால், விண்ணப்பதாரர்களின் அபேட்சகர் தன்மை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான தவறு அல்லது தவறான வழிநடத்தல் நியமனத்தின் பின்னர் கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட ஒழுங்கு நடைமுறைக்கு உட்பட்டு பணிநீக்கம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**பதிவாளர்**
**இலங்கை மருத்துவப் பேரவை**
**31, நொரிஸ் கெனல் வீதி**
**கொழும்பு 10**
**registrar@slmc.gov.lk**

**2025 மார்ச் 02**